**எம்பிலிபிட்டிய பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 21 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 70,421 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்களை அகற்றுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும், அதனை அகற்றாமல் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 15,500 தொகையான தண்ணீர் தாங்கியொன்று நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 147,095 கூட்டுத்தொகையான நுகர்வுப் பொருட்கள் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் அந்த அளவால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 08 அலுமாரிகள், 10 அலுமாரிகளாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் ரூபா 32,317 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) ஆண்டின் போது கிடைக்கப் பெற்ற ரூபா 233,200 தொகையான ஆயுர்வேத மருந்துகள் ரூபா 227,100 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக வருமானம் ரூபா 6,100 குறைத்துக் காண்பிக்க்பபட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது முற்பணமாகக் கிடைத்த ஆதனவரி ரூபா 16,497 தொகை குறைத்துப் பதியப்பட்டதனால் பொறுப்புக்கள் அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த ரூபா 60,490 கூட்டுத்தொகையான 140 புத்தகங்கள் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

06 கணக்கு விடயங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் படியான மீதிக்கும் இடையே ரூபா 550,132 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>நிதிப்பிரமாணம் 571 மற்றும் 571(2) | 2013 ஆம் ஆண்டு முதல் 2014 நவம்பர் 22 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 682,840 கூட்டுத் தொகையான வைப்புக்களை ஓய்வுபெறச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் I ஆம் தொகுதியின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பிரிவு | பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற 12 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 64,223 கூட்டுத்தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு தவறியிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,706,045 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,449,768 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 7,256,277 அதிகரிப்பொன்று காணப்பட்டது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 7,256,277 இனால் அதிகரித்தமை தொடர்பில் 04 விடயங்களின் வருமானம் ரூபா 8,803,922 இனால் அதிகரித்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 3,169 | 6,450 | 5,729 |
| வாடகை | 8,129 | 9,691 | 605 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,382 | 1,474 | 10 |
| ஏனைய வருமானம் | 47,992 | 38,713 | 18,772 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது ஆதனவரி, வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் சேவைகளுக்கான கட்டணம் என்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவினைவிட முறையே 69 சதவீதம், 16 சதவீதம், 06 சதவீதம் மற்றும் 20 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும், ஏனைய வருமானங்கள் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு என்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதிடப்பட்ட அளவினை விட முறையே 09 சதவீதம் , 68 சதவீதம் மற்றும் 42 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது.

### 2.3.3 ஆதனவரி

2016 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையில் 1426 ஆதனவரி அலகுகளிலிருந்து ரூபா 1,816,516 கூட்டுத்தொகையான நிலுவை ஆதனவரி அறவிட வேண்டியிருந்தது.

### 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வியாபார வரி, கைத்தொழில் வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர வருமானம் என்பன ரூபா 257,280 நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.3.5 ஏனைய வருமானம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பகிரங்கப்படுத்தப்பட்ட 1986 இன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டம் மற்றும் கட்டிட கட்டளைகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் V ஆவது பட்டோலையின் படி தொலைபேசி பரிவர்த்தனை கோபுரங்களை நிர்மாணிக்கும் போது 04 நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய கட்டணம் ரூபா 704,070 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்காக 2016 ஒக்தோபர் 21 ஆந் திகதி வரையில் சப்ரகமுவ மாகாண சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 5,978,127 கூட்டுத்தொகயான நீதிமன்றத் தண்டப் பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 03 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் 2014 யூலை முதல் 2016 திசெம்பர் வரை சபைக்கு உரித்தான முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 செயலாற்றல்

---

மீளாய்வாண்டின் வருடாந்த பாதீட்டின் பிரகாரம் சபை நிதியம் மற்றும் ஏனைய நிதியம் என்பவற்றின் கீழ் முறையே ரூபா 8,137,307 மற்றும் ரூபா 30,000,000 ஆக கூட்டு மொத்தமாக ரூபா 38,137,307 தொகை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அபிவிருத்தி நடவடிக்கைகள் தனித்தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியளவில் சபை நிதியம் மற்றும் ஏனைய நிதியம் என்பவற்றிலிருந்து முறையே ரூபா 4,806,340 மற்றும் ரூபா 538,459,195 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 543,265,535 தொகை செலவில் 306 செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) உப பிரிவின் பிரகாரம் காணி ஏலவிற்பனையின் போது விற்பனை செய்யப்பட்ட நிலப் பகுதிகளின் விற்பனைப் பெறுமதியில் 1 சதவீதமான வரித் தொகை சபைக்கு அறவிட வேண்டியிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் போது சபை அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட காணி ஏல விற்பனைக்குரிய வரித் தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

### 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

2006 ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்யப்பட்ட விரசிங்ஹபுற கணவெதிஆற வீதி அபிவிருத்தி செய்யும் வேலைக்காக வேலைப் பூர்த்தி அறிக்கை சமர்ப்பிக்காதிருக்கும் போது 2010 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 100,000 மற்றும் ரூபா 386,147 தொகையாக முதலாவது மற்றும் இறுதிக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய PC/3/3/2015 ஆம் இலக்க நிதி ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்தியின் பிரகாரம் வீதி

நிர்மாணத்தின் போது கிரவல் இடல் போன்ற தற்காலிக செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருக்க வேண்டிய போதிலும், கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் சபையினால் கூட்டுமொத்தமாக ரூபா 1,933,495 செலவில் 03 வீதிகள் கிரவல் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி ரூபா 488,100 தொகையான வெலிபதயாய 2 ஆம் கட்டை வீதிக்கு கிரவல் இடும் வேலை தொடர்பாக 2016 நவம்பர் 23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த 800 மீற்றர் தூரம், 03 பகுதிகளைக் கொண்டதாக காண்பிக்கப்பட்டிருந்தும் தூர அளவை சரியாகக் காண்பிப்பதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் தவறியிருந்ததுடன் வீதிக்கான மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது அல்லது கொடுப்பனவுப் பட்டியல்களைத் தயாரிக்கும்போது அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதி தொடர்பாக வரைபடத்தின் மூலம் அல்லது எழுத்துமூலம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் அங்கீகரிக்கப்படாத வெள்ளை நிறமான கிரவல் வகை வேலைக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. வீதியின் மேற்பரப்பில் முதலாவது 72 மீற்றரிலும் இறுதி 100 மீற்றரிலும் வீதி மேற்பரப்பு உரிய பிரகாரம் சமப்படுத்தப்பட்டு செப்பனிடப்படாதிருந்ததுடன் பயன்படுத்தப்பட்ட கிரவலிலிருந்து அகற்றப்பட்ட கற்களால் வீதியின் இருபக்கங்களிலும் குவிந்து காணப்பட்டது.

(இ) உடன்படிக்கைப் பெறுமதி ரூபா 476,704 தொகையான வீரசிங்கஹபுற கிராமத்தின் வீதிக்கு கிரவல் இட்டு அபிவிருத்தி செய்யும் வேலை தொடர்பாக 2016 நவம்பர் 23 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது வீதியில் கிரவல் இடப்பட்டதன் பின்னர் உரிய பிரகாரம செப்பனிடப்படாமையின் காரணமாக மழையினால் வீதியின் இருக்கமும் அனேக இடங்கள் ஈரலிப்பாக இருந்ததுடன் வீதியின் மேற்பரப்பில் 07 இடங்களில் மொத்தமாக 184 மீற்றர் தூர அளவு கழுவிச் செல்லப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 28 செலவின விடயங்களில் ரூபா 568,000 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்காக விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு வேலை கையளிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அலகு செயற்பட்டிருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை ஸ்தாபித்து அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 தீர்க்கப்படாதுள்ள மற்றும் பதிலளிக்கப்படாதுள்ள கணக்காய்வு ஐயவினாக்கள்

2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கணிப்பீடு செய்யக்கூடிய ரூபா 11,811,573 பெறுமதியான 04 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் வேண்டப்படுகின்றது.

| **முறைமைகள்** | | **அவதானிப்புக்கள்** |
| --- | --- | --- |
| (அ) கணக்கீடு | (i) | நிலையான சொத்துக்களைக் குறைத்துப் பதிதல் |
| | (ii) | நிலையான சொத்துக்களை அதிகரித்துப் பதிதல் |
| | (iii) | வகைப்படுத்தல் வழுக்கள் காணப்பட்டமை |
| | (iv) | பொறுப்புக்களை அதிகரித்துப் பதிதல் |
| | (v) | வருமானத்தை குறைத்துப் பதிதல் |
| (ஆ) வருமான நிர்வாகம் | | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | | நிறைவேற்றப்படாத பணிகளுக்காக கொடுப்பனவு செய்தமை. |
| (ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு | | நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமை |